Uva Wellassa University

தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பதில் பெருமை கொள்வோம்

# வெற்றிடங்கள் - ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

## 01. பதவி: பிரதான ஒழுக்க அதிகாரி (CHIEF MARSHAL)

**தகைமைகள்:**

பல்கலைக்கழக அமைப்பில் மார்ஷல் சேவையில் பிரதி தலைமை மார்ஷல் பதவியை வகித்து, அப்பதவியில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையுடன் உறுதிப்படுத்தப்பட்டவர்.

**உடல்வாகு**

உயரம் : 5'5"

மார்பளவு : 32" (காற்றிறக்கமின்றி)

குறிப்பு : பல்கலைக்கழக அளவிலும் தேசிய அளவிலும் விளையாட்டு நடவடிக்கைகள், சமூக நல நடவடிக்கைகள் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் தீவிரமாகப் பங்கேற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

அல்லது

இலங்கை ஆயுதப் படைகளில் லெப்டினன்ட் கேர்னல் பதவிக்குக் குறையாத அதிகாரி / இலங்கை பொலிஸ் துறையில் அதற்கு இணையான பதவியில் விளையாட்டு நடவடிக்கைகளில் தீவிரமாகப் பங்கேற்றுள்ளவர்.

மேலதிகமாக தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரருக்கு வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் ஏனைய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

கட்டமைக்கப்பட்ட நேர்காணல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

கட்டமைக்கப்பட்ட நேர்காணலில் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்விற்கு தகுதி பெறுவர்.

## 02. பதவி: உதவி வலையமைப்பு முகாமையாளர் - தரம் II (ASSISTANT NETWORK MANAGER)

**தகைமைகள்:**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து கணனி விஞ்ஞானம் / கணனி பொறியியலில் முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பில் B.Sc சிறப்புப் பட்டத்தைப் பெற்றிருத்தல்

அல்லது

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து கணனி விஞ்ஞானம் / கணனி பொறியியலில் B.Sc சிறப்புப் பட்டத்தில் ஒரு சித்தி

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து கணனி அறிவை ஒரு பாடமாகக் கொண்டு முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு B.Sc பொதுப் பட்டம்

மற்றும்

(ஆ) கணனி / வலையமைப்பு துறையில் ஒரு வருடகால அனுபவம்

அல்லது

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து கணனி அறிவை ஒரு பாடமாகக் கொண்டு B.Sc பொதுப் பட்டத்தில் ஒரு சித்தி

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து (கணனி ஒரு பாடக்கூறு அல்ல) முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பில் ஒரு B.Sc பொதுப் பட்டம்

மற்றும்

(ஆ) கணனி / வலையமைப்பு துறையில் இரண்டு வருடகால அனுபவம்

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து (கணனி ஒரு பாடக்கூறு அல்ல) ஒரு B.Sc பொதுப் பட்டத்தில் சித்தி

மற்றும்

கணனி / வலையமைப்பு துறையில் மூன்று வருடகால அனுபவம்

அல்லது

வேறேதாவது பட்டம்

மற்றும்

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து கணனி விஞ்ஞானம் / கணனி தொழில்நுட்பத்தில் ஒரு பட்டப் பின்படிப்பு டிப்ளோமா

மற்றும்

கணனி / வலையமைப்பு துறையில் ஒரு வருடகால அனுபவம்

அல்லது

பல்கலைக்கழக சேவையில் கணனி நிரலியலாளராக (Computer Programmer )15 வருடகால அனுபவம்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

## 03. பதவி: செயற்றிட்ட முகாமையாளர் (PROJECT MANAGER)

**தகைமைகள்:**

1. (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / சிவில் பொறியியல் விசேடத்துவ உயர்கல்வி நிறுவனத்திலிருந்து சிவில் பொறியியலில் B.Sc (Eng.) பட்டம்

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / அளவுக் கணிப்பீட்டில் விசேடத்துவ உயர்கல்வி நிறுவனத்திலிருந்து அளவுக் கணிப்பீட்டில் B.Sc பட்டம்

அல்லது

நிகரான தொழில்சார் தகைமைகள்

மற்றும்

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் நிறுவனத்தின் கூட்டுவர்த்தக அங்கத்துவம்

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட அளவுக் கணிப்பீட்டு நிறுவனத்தின் கூட்டுவர்த்தக அங்கத்துவம்

மற்றும்

(இ) நிர்மாண செயற்றிட்டங்கள், ஒப்பந்தங்களைக் கையாளுதல் மற்றும் நேரடி உழைப்பை முகாமைத்துவம் செய்வதில் தொடர்புடைய 10 வருடகால அனுபவம்

கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

**சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் (2025-01-01இல் உள்ளவாறு)**

➢ **பிரதான ஒழுக்க அதிகாரி**

U-EX 2 (II)

ரூபா: 113,690 -8x2,400; 8x2,940 -156,410 மாதாந்தம் (2025-01-01இல் உள்ளவாறு)

➢ **உதவி வலையமைப்பு முகாமையாளர் பதவி தரம் II**

U-AS 2 (II)

ரூபா: 85,305-3x2,400-92,505(EB)94,905-14x2,400-128,505 மாதாந்தம் (2025-01-01இல் உள்ளவாறு)

➢ **செயற்றிட்ட முகாமையாளர் பதவி**

U-EX I (II)

ரூபா: 85,305-3x2,020-91,365 (EB) 93765;12x2,400-122,565 மாதாந்தம் (2025-01-01இல் உள்ளவாறு)

இதற்கு மேதிலகமாக பல்கலைக்கழக முறைமைக்கு ஏற்புடையதான அரசாங்கத்தில் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

நியமன நிபந்தனையானது 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் விதிகள், அதன் பின்னரான திருத்தங்கள் மற்றும் அதன் கீழ் மேற்கொள்ளப்பட்ட கட்டளைச் சட்டம், ஒழுங்குவிதிகள், சட்ட திட்டங்கள் என்பவற்றிற்கு அமைவானதாகும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கான ஏனைய அனைத்து நலன்களும் பொருந்தும்

**ஏனைய நிபந்தனைகள்**

1. சகல விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரஜைகளாக இருக்க வேண்டும்.
2. 45 வயதிற்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.
3. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பரிந்துரைக்கப்பட்ட படிவங்களுடன் தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகள். சுய தரவுடன் பதிவுத் தபாலில், சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (கல்விசாரா), மனிதவளப் பிரிவு, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், பசறை வீதி, பதுளை என்ற முகவரிக்கு கிடைக்கும் வகையில் 2026-09-01ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
4. விண்ணப்பப் படிவம் மற்றும் கூகுல் படிவங்கள் மற்றும் தொடர்புடைய தகவல்களை www.uwu.ac.lk. எனும் பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.
5. முக்கியமானது: மேலும், உங்கள் விண்ணப்பத்தை கூகுல் படிவம் வழியாகச் சமர்ப்பிப்பது கட்டாயமாகும், மேலும் உங்கள் விண்ணப்பப் படிவத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியை இறுதித் திகதிக்கு முன்னர் கூகுல் படிவத்தில் பதிவேற்ற வேண்டும். https://forms.gle/Y1LXht2ndHVt2tZK8
6. தயவுசெய்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடவும்.
7. முழுமையற்ற விண்ணப்பங்கள், ஆதார ஆவணங்கள் அற்ற விண்ணப்பங்கள் மற்றும் முடிவுறுத்தல் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. அபேட்சகர்களை குறும் பட்டியலிடுவதற்கும் மற்றும் அவ்வாறான அபேட்சகர்களை மட்டும் நேர்முகத் தேர்விற்கு அழைப்பதற்குமான உரிமையை பல்கலைக்கழகம் தன்னகத்தே கொண்டுள்ளது.
8. மேலதிக தெளிவுபடுத்தல்களை மனித வளப் பிரிவு, சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். 055-3128945 / 055-3128945 அல்லது recruitment@uwu.ac.lk

**பதில் பதிவாளர்,**
**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்,**
**பசறை வீதி,**
**பதுளை.**

**0552226441**
**2026-08-02.**